சர்வதேச வீரர்களை உருவாக்கிய - கடலூர் அண்ணா மைதானத்தில்

# ரூ.15 கோடி மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளம்!

## கடலூரில் 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

கடலூரில், நவ. 28 -

கடலூர் மாவட்டத்தில் உள்ள 683 ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கடலூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து மகளிர் சுய உதவிக்குழுக்கள் கடன் தொகை வங்கிக் கடன் இணைப்பு, மற்றும் 64 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

முதலமைச்சர் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசின் சார்பாக, கடலூர் மாவட்டத்தில் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 12 ஆயிரம் பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த மூன்று நாட்களாக ஏராளமான நிகழ்ச்சிகள்.

திருச்சி மாவட்டத்தில் ஆரம்பித்து, துறையூரில் தொடங்கி நாகை, சீர்காழி போன்ற இடங்களில் எல்லாம் நடைபெற்ற அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்றுவிட்டு, இன்றைக்கு கடலூர் வந்து சேர்ந்திருக்கிறேன். அமைச்சர் அண்ணன் எம்.ஆர்.கே சொன்னதைப்போல, கடலூருக்குப் பலமுறை வந்திருக்கிறேன். பிரச்சா ரங்களுக்கு வந்து இருக்கிறேன். கழக நிகழ்ச்சி, அரசு நிகழ்ச்சி, சட்டமன்ற உறுப்பினராக வந்து இருக்கிறேன். விளையாட்டுத்துறை அமைச்சராக வந்து இருக்கிறேன். துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்று உங்களையெல்லாம் சந்தித்து, உங்களின் வாழ்த்துகளைப் பெறுவதற்கு வந்திருக்கிறேன்.

**`எல்லோருக்கும் எல்லாம்'!**

`திராவிட மாடல்' என்று சொன்னாலே, `எல்லோருக்கும் எல்லாம்' என்பதுதான் அர்த்தம். அதன் அடிப்படையில், இந்த நிகழ்ச்சிக்கூட ஒரு `திராவிட மாடல் நிகழ்ச்சி' என்று சொல்லலாம். ஏனென்றால், எல்லோருக்கும் எல்லா திட்டங் களும் கொடுக்கப்படுகின்றன.

`கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' திட்டம் வாயிலாக, கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் 33 வகையான விளையாட்டு உபகரணங்கள் கொடுக்கப்படுகின்றன. மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 10 ஆயிரம் சகோதரிகளுக்கு 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக்கடன் இணைப்புகள், ஆயிரத்திற்கும் அதிகமானவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா, விவசாயிகள், தொழில்முனைவோர்கள், மாற்றுத் திறனாளிகள், பிற்படுத்த ப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் சமூகத்தினர் அனைத்துத் தரப்பு மக்களுக் கும் இந்த மேடையில் நலத்திட்ட உதவிகள், அரசின் திட்டங்கள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

**நீங்கள் மறந்துவிட முடியாது!**

யார் யாருக்கு என்னென்ன தேவை என்பதைப் பார்த்துப் பார்த்து நிறைவேற்றுவதுதான் நம் திராவிட மாடல் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை நீங்கள் மறந்துவிட முடியாது. இங்கு நலத்திட்டங்களைப் பெறுகின்ற அத்தனை பேருக்கும் முதலில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் விளையாட்டுத் துறையில் திறமை யாளர்களை உருவாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில் `கலைஞர் ஸ்போர்ட்ஸ்கிட்' என்ற திட்டத்தைச் சென்ற ஆண்டுத் தொடங்கினோம்.

இதுவரை சுமார் 30 மாவட்டங்களுக்கு இந்த ஸ்போர்ட்ஸ் கிட் கொடுக்கப்பட்டுள்ளது. கடலூர்



மாவட்டத்தில் இருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள், வீராங்கனையர்கள் உருவாகி இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி க்குகூட, சர்வதேச அளவிலான கால்பந்துப் போட்டியில் இந்தியா சார்பாகப் பங்கேற்று சாதனைகள் படைத்து வருகின்ற தங்கைகள் சந்தியா மற்றும் கார்த்திகா ஆகியோர் வருகை தந்து இருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் நம் அனைவரின் சார்பாகப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

**சிறப்பாக விளையாடியவர்!**

எஸ்.ஏ.எஃப்.எஃப் சாம்பியன்சிப், சௌத் ஏசியன் கேம்ஸ், 27-வது சீனியர் பெண்கள் சாம்பியன்சிப் ஆகிய போட்டிகளில் கோப்பையை வென்று இந்திய அணியில், தமிழ்நாட்டு அணியில் சிறப்பாக விளையாடிய வர்தான் தங்கை சந்தியா அவர்கள். டர்கிஸ் பெண்கள் கோப்பை, 28வது சீனியர் பெண்கள் கால்பந்து சாம்பியன்சிப், 27வது சீனியர் பெண்கள் தேசிய சாம்பியன்சிப், கேலோ இந்தியா இன்டர் யுனிவர்சிட்டி சாம்பியன்சிப், ஆல் இந்தியா இன்டர் யுனிவர்சிட்டி ஃபுட்பால் சாம்பியன்சிப் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச, தேசிய கால்பந்துப் போட்டியில் வென்ற அணிகளில் சிறப்பாக விளையாடிய வர்தான் தங்கை கார்த்திகா அவர்கள்.

கடலூர் மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவிலும் விளையாட்டுத்துறையில் சாதிக்கத் துடிக்கின்ற அத்தனை மகளிருக்கும் ஒரு எடுத்துக் காட்டாக, முன்னுதாரணமாக இருக்கின்ற இந்த இரண்டு தங்கைகளுக்கு நம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் அவர்களின் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்வோம். அவர்கள் முன்பாக இப்போது கலைஞர் விளையாட்டு உபகரணங் களைக் கொடுக்க இருக்கிறோம். விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாக, கலைஞர் பெயரில் செயல்படுத்துகின்ற முதல் திட்டம் இது.

**கலைஞரின் குணங்கள்!**

இந்தத் திட்டத்திற்கு முதன்முறையாகக் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' திட்டம் என்று பெயர் வைத்தோம். எதற்கு ஒரு ஸ்போர்ட்ஸ் திட்டத்திற்கு, கலைஞரின் பெயரை வைக்க வேண்டும் என்று நீங்கள்கூட யோசிக்கலாம். ஏனென்றால், கலைஞரிடம் இருந்த அந்த விடாமுயற்சி, திட்டமிடல், மன உறுதி உள்ளிட்ட அத்தனை குணங்களும் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் கலைஞர் பெயரை இந்தத் திட்டத்திற்கு வைத்தோம்.

இங்கு நிறைய மகளிர் வந்துள்ளீர்கள். கடலூர் மகளிரைப் பொறுத்தவரைக்கும் உழைப்புக்குப் பெயர் போனவர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு, நம் திராவிட மாடல் அரசு சார்பாக, 71 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக்கடன் இணைப்பை வழங்க உள்ளோம். இதனை நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்குக் கொடுக்கின்ற கடன் தொகையாக மட்டும் பார்க்கவில்லை. உங்களின் உழைப்பின்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைத் தொகையாகப் பார்க்கிறார். இந்தக் கடன் இணைப்பின் வாயிலாகச் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள், நீங்கள் வாழ்வில் இன்னும் பல உயரங்களைத் தொட, எங்களின் அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**1000 பேருக்கு வீட்டுமனைப் பட்டா!**

ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இருக்கிறோம். வீடு எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் அந்த வீட்டின் பட்டா. உங்கள் இடத்திற்கான பட்டா என்பது, உங்களின் சட்டப்பூர்வ உரிமை. அந்த உரிமையை நிலைநாட்டுகின்ற விதமாக உங்களுக்கு இன்று இந்த நிகழ்ச்சியில் பட்டா வழங்க இருக்கிறோம். அதற்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான திட்ட ங்களை, நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார். முக்கிய மாக இந்தியாவே திரும்பிப் பார்க்கின்ற வகையில் மகளிருக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை, முதன்முதலில் நம் முதலமைச்சர்தான் அறிவித்துச் செயல்படுத்தினார். ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு முழுக்க ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம் ஆயிரம் ரூபாயை இத்திட்டத்தின் வாயிலாகப் பெறுகின்றனர். கடலூர் மாவட்டத்தில் மட்டும் 5 லட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெற்று வருகிறார்கள்.

**கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம்!**

கடலூர் மாவட்டத்தில் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம், விடியல் பயணத் திட்டத்தின் வாயிலாக, இதுவரைக்கும் 17 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறீர்கள். ஒவ்வொரு மகளிரும் இந்த விடியல் பயணம் திட்டத்தின் வாயிலாக, மாதம் ரூபாய் 900 ரூபாயில் இருந்து1,000 ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பெண்கள் படிக்க வேண்டும் என்று புது மைப்பெண் திட்டம், ஆண்களுக்கு, தமிழ்ப் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாக 21 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் கடலூர் மாவட்டத்தில் பயன்பெறுகிறார்கள்.

கடலூர் மாவட்டத்தில் மட்டும் முதல மைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் வாயிலாக, 58 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் தினமும் பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் உங்கள் வாழ்வை மென்மேலும் ஒளிமயமாக்கட்டும்.

கடலூர் மாவட்டத்தில், விளையாட்டு மேம்பாட்டிற்காகவும், ஏராளமான கட்டமைப்புகளுக்காவும் ஏராளமான நடவடிக்கைகளை நம் திராவிட மாடல் அரசு எடுத்து வருகிறது. இங்குள்ள `பேறறிஞர் அண்ணா மைதானம்' ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. விருதாச்சலத்தில் உள்ள மினி ஸ்டேடியத்தில் கேலரியை மேம்படுத்தும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் 18 லட்சம் ரூபாய் அள வில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 18 லட்சம் ரூபாய் செலவில், மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மேம்படுத்தப்பட்டுள்ளது.

**பேறறிஞர் அண்ணா மைதானம்!**

இந்தச் சமயத்தில் உங்களின் முக்கியமான வேண்டுகோளை ஏற்று, ஒரு அறிவிப்பை வெளியிட இருக்கிறேன். பேறறிஞர் அண்ணா அவர்களால் 1968ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975ஆம் ஆண்டுத் திறந்து வைக்கப்பட்ட பேறறிஞர் அண்ணா மைதானம், விரைவில் பொன்விழா காண உள்ளது. பல சர்வதேச, தேசிய அளவிலான வீரர்களை உருவாக்கிய அண்ணா மைதானத்தில் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளம் (ஆர்ட்டிபீசியல் பைபர் சின்தடிக் டிராக்) அமைக்கப்படும் என்ற அறிவிப்பை முதலமைச்சரின் உத்தரவின் பேரில், அவரின் அனுமதியோடு, அவரின் வழிகாட்டுதலின் படி உங்களின் கோரிக்கையை ஏற்று இங்கு அறிவிக்கிறேன். அதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று நம்புகிறேன்.

இங்கு விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுள்ள இளைஞர்கள் அதனை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள், தொழில்முனைவோர்கள், இங்கு நலத்திட்ட உதவிகளைப் பெற்றுள்ள அத்தனைப் பயனாளிகளுக்கும் மீண்டும் என் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணுபிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராஜேந்திரன், சிந்தனைச் செல்வன், ஐயப்பன், இராதாகிருஷ்ணன், கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்யா மிஷ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத்ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி துணை மேயர் தாமரைச்செல்வன், புனித வளனார் மேல்நிலைப் பள்ளி முதல்வர் அருள்திரு. சகாயராஜா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன்,

மாநகராட்சி ஆணையர் மருத்துவர்.அனு ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரண்யா ஐ.ஏ.எஸ்., நெல்லிக்குப்பம் புகழேந்தி, வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா, சையத் முகமத், சர்வதேச கால்பந்து வீராங்க னைகள் சந்தியா, கார்த்திகா, மாநகரச் செயலாளர் கே.எஸ்.ராஜா, அரசு அதிகாரிகள், அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதி கள், விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள், நலத்திட்டப் பயனாளிகள் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; அரசியலமைப்பு தினத்தை யொட்டி வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தில், "நீதி, சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் ஆகிய அரசியலமைப்புக் கொள்கைகளில் உறுதியாக இருக்கும் நாம்" என்று, ஒன்றிய பா.ஜ.க. அரசு குறிப்பிட்டுள்ளதே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; "சமத்துவம் இல்லையேல் சுதந்திரம் இல்லை; சகோதரத்துவம் இல்லையேல் சமத்துவமோ,சுதந்திரமோ இல்லை" என்பது அண்ணல் அம்பேத்கரின் அடிப்படைக் கொள்கை.**

**உலக ஏற்றத் தாழ்வு அறிக்கையின்படி, இந்தியாவில் 2023ல், நாட்டின் மேல்தட்டு 10 சதவீத மக்கள், நாட்டின் மொத்த செல்வத்தில் 65 சதவீதத்தையும், மொத்த வருமானத்தில் 58 சதவீதத்தையும் கைப்பற்றி உள்ளனர். மாறாக, கீழ்த்தட்டு மக்கள் வெறும் 6.5 சதவீத செல்வத்தையும், 15 சதவீத வருமானத்தையும் மட்டுமே பெறுகின்றனர்.**

**இந்த நிலையில் இந்தியாவில் எங்கே இருக்கிறது சமத்துவம்? சுதந்திரமும், சகோதரத்துவமும் எங்கே ? மத வெறியையும், வெறுப்பையும், வேறுபாடுகளையும் ஒன்றிய பா.ஜ.க. அரசே தூண்டிவிடுகிறதே! ஏட்டுச் சுரைக்காயாக மதிக்கப்படும் இலட்சியங்கள், ஏழைகளின் ஏக்கத்தைப் போக்குமா ? "எளியோரைத் தாழ்த்தி, வலியோரை வாழ்த்தும்" ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் ஆர்ப்பாட்ட விளம்பரங்கள், யாருக்கும் பயன்படாது!**

---

## விழுப்புரம் தெற்குமாவட்டம் - முகையூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் திருமதி பிரேமா (ஏ) லூர்துமேரி அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக, தான் வகித்த வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக திரு.**எஸ்.லூயிஸ்** (ரயில்வே புது நகர், முகையூர் 605 755, விழுப்புரம் மாவட்டம்) அவர்கள் முகையூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## தி.மு.க. 15ஆவது பொதுத்தேர்தல்

## விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியம், மாவட்டப் பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விருதுநகர் தெற்குமாவட்டம், அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றியத்தின் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரா.அப்பணசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

விருதுநகர் தெற்கு மாவட்டம், அருப்புக்கோட்டைதெற்கு ஒன்றியம் மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, நவம்பர் 28 (வியாழக் கிழமை)அன்று ரூ.1000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தகுதிவிவரம்

ஒன்றியக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்பு மனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த ஒன்றியத்திற்கு கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைச் செயலாளராகவோ, பேரூர்ச் செயலாளராகவோ, ஒன்றியப் பிரதிநிதியாகவோ இருத்தல வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்திபெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## விழுப்புரம் தெற்கு மாவட்டம்

## முகையூர் வடக்கு, முகையூர் தெற்கு ஆகிய ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சிகள் !

## திருத்தம்

### தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் ஏற்கனவே வெளியிடப்பட்ட விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் செய்யப்படுகிறது.

விழுப்புரம் தெற்கு மாவட்டம், முகையூர் வடக்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **முகையூர்** ஊராட்சி **முகையூர் தெற்கு ஒன்றியக் கழகத்தின்** கீழும்;

முகையூர் தெற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **புத்தூர், கொல்லூர்** ஆகிய 2 ஊராட்சிகள் **முகையூர் வடக்கு ஒன்றியக் கழகத்தின்** கீழும் செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.11.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி ஆலோசனைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையேற்று இரத்ததான முகாமை துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, பொதுக்குழு பஞ்சநாதன், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி. தெய்வசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு வி ராஜா, வி.ஜி.பிராபகரன், பேரூர் செயலாளர் பா ஜீவா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், இளைஞர் அணி செ.தினகரன், பொறியாளர் அணி புகழ். செல்வகுமார், தொண்டர் அணி கபாலி, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு , நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி டெல்லியில் உள்ள ரயில்வே வாரிய தலைவர் சதீஷ்குமாரைச் சந்தித்து சென்னை எழும்பூர் காரைக்குடி கம்பன் விரைவு வண்டியினை மீண்டும் இயக்குவதற்கும்.அதிராம்பட்டினம், பூதலூர், ஆலக்குடி, அய்யனாபுரம், நீடாமங்கலம், பாபநாசம் ஆகிய ரயில் நிலையங்களில் பல்வேறு ரயில்களை நிறுத்தம் செய்வதற்கும். திருச்சி – தாம்பரம் சிறப்பு ரயிலினை நிரந்தரமாக தினசரி இயக்கவும். மன்னார்குடி முதல் சென்னை வரை தஞ்சாவூர் வழியாக வந்தே பாரத் ரயில் இயக்கவும். தஞ்சாவூர் – விழுப்புரம் மெயின் லைனை ஒரு வழி பாதையில் இருந்து இருவழிப் பாதையாக அமைப்பதற்கும். தாம்பரம் – செங்கோட்டை விரைவு வண்டியை வாரம் ஏழு நாட்கள் இயக்கவும், மன்னார்குடி – பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் – பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் – புதுக்கோட்டை , தஞ்சாவூர் – அரியலூர் ஆகிய புதிய ரயில் வழித்தடங்களை அமைத்திடவும். திருச்சி – பாலக்காடு பேசஞ்சர் மற்றும் திருச்சி – ஹௌரா விரைவு வண்டியினை தஞ்சாவூர் வரை நீட்டிப்பு செய்யவும் மற்றும் தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ரயில்வே சம்பந்தமான பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நிறைவேற்றி தருமாறு கோரிக்கை வைத்தார்.